# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2002/66 - 2017 ජනවාරි මස 20 වැනි සිකුරාදා - 2017.01.20

*2002/66 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

*சப்பிரகமுவ மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) நியதிச்சட்டம்*

*2016.12.27 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ தவிசாளர் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*
*2017.01.05 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதி அளிக்கப்பட்டது.*

*சப்பிரகமுவ மாகாண மாகாண சபையின் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

**சப்பிரகமுவ மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தம்) நியதிச்சட்டம்**

*2016.12.01 ஆந் திகதி சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2017.01.05 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதியளிக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) நியதிச்சட்டம் அனைவரும் அறிந்துகொள்வதற்காக இங்கு கீழே பிரசுரிக்கப்படுகின்றது.*

பி. எஸ். ஆர். எம். விஜயராஜ,
சபைச் செயலாளர்,
சப்பிரகமுவ மாகாண சபை.

*சப்பிரகமுவ மாகாண சபை,*
*2017, சனவரி 18.*

**சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் சப்பிரகமுவ மாகாண சபை - 2017

**4 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் - 2016**

*2017 ஆம் நிதியாண்டின் சேவைச் செலவினங்களுக்காக ஏற்பாடு செய்தல், அத்தகைய சேவைச் செலவினங்களுக்காக சப்பிரகமுவ மாகாணத்திற்குள் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரமளித்தல், அந்த நிதியாண்டிற்குள் சப்பிரகமுவ மாகாண சபையின் சில விவகாரங்கள் தொடர்பில் நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல், அந்த விவகாரங்கள் தொடர்பிலான செலவினங்களுக்காக அந்த நிதியாண்டிற்குள் தேவைப்படும் பணங்களை சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது ஏனைய யாதாயினுமொரு நிதியத்திலிருந்து பணத்தொகைகளாக அல்லது முற்பணத்தொகைகளாகச் செலுத்துவதற்கு இடமளித்தல், சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்கு அப்பணங்களை மீளச்செலுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் மேற்கூறிய கருமங்களுடன் தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்குமான ஒரு நியதிச் சட்டமாகும்.*

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாண சபையினால் பின்வருமாறு விதிக்கப்படுகின்றது.

*சுருக்கப் பெயரும் செயற்படும் திகதியும்.*

1. இந்த நியதிச்சட்டம் சப்பிரகமுவ மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டமென அறிமுகப்படுத்தப்பட்டதுடன் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற திகதி தொடக்கம் அது செயற்படும்.

*2017 ஆம் நிதி யாண்டிற்கான ஒதுக்கீடுகள்.*

2. (1) ஏதாவதொரு பணத்தொகையைச் செலவிடுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற வேறு ஏதேனுமொரு சட்டத்திற்கு பங்கம் ஏற்படாதவாறு இந்நியதிச் சட்டத்தில் "2017 ஆம் நிதியாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி ஆரம்பமாகி 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் கால எல்லையின் சேவைச் செலவினங்களுக்காகத் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இருபத்தையாயிரத்து எழுநூற்றொன்பது மில்லியன்களும் இருநூறாயிரம் (25,709,200,000) ரூபாவான சப்பிரகமுவ மாகாண சபையின் செலவினமானது :-

(அ) சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது ஏனைய யாதாயினுமொரு நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து செலுத்துவதற்காக இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற கொடுப்பனவுகளாலும், அத்துடன்

(ஆ) சப்பிரகமுவ மாகாணத்திற்குள் கடன்களாக சப்பிரகமுவ மாகாண சபையில் பெற்றுக்கொள்ளும் பணத்தொகையிலிருந்து அல்லது சப்பிரகமுவ மாகாண சபைக்காகப் பெற்றுக்கொள்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற, கடன்களாகப் பெற்றுக்கொள்ளும் பணத்தொகைகளால் தீர்க்கப்படுதல் வேண்டும். இங்கு மேலே குறிப்பிடப்பட்ட இருபத்தையாயிரத்து எழுநூற்று ஒன்பது மில்லியன்களும் இருநூறாயிரம் (25,709,200,000) ரூபாவான பணத்தொகை இந்நியதிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் அட்டவணையின் ஏற்பாடுகள் சப்பிரகமுவ மாகாண சபைக்காகவும், அதன் பேரில் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அதிகாரமளிக்கப்படுகின்ற வேறு ஏதேனுமொரு எழுத்து மூலமான சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமேற்படாதவாறு செய்யப்படுதல் வேண்டும்.

*2017 ஆம் நிதி யாண்டிற்கான சப்பிரகமுவ மாகாண சபையின் சில விவகாரங்கள் தொடர்பில் நிதி வழங்குதல்.*

3. (1) 2017 ஆம் நிதியாண்டிற்குள் இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விவகாரத்திலிருந்தும் சப்பிரகமுவ மாகாண சபை பெறும் VI ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகைகள் அவ்விவகாரத்தின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டுமென்பதுடன் அவ்வாறு வரவு வைக்கப்பட்ட பெறுகைகளின் கூட்டு மொத்தத் தொகையானது அந்த அட்டவணையின் VI ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைக்குக் குறைவடையாதிருத்தல் வேண்டும். அவ்வாறு தூய மேன்மிகை ஏதுமிருப்பின் அது 2017 ஆம் நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாதங்கள் செல்வதற்கு முன் சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) 1 ஆம் உட்பிரிவின்கீழ் தூய மேன்மிகையைத் தீர்மானிப்பதற்காக கீழ்க்குறிப்பிட்டுள்ள கட்டணங்கள் அதாவது,

(அ) ஏதாவதொரு விவகாரத்தின் வருமானத்திற்கு வரவேண்டிய முறைப்படி செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படவுள்ளதான அவ்விவகாரத்தின் தொழிற்பாட்டுத் தாபன மற்றும் ஏனைய செலவினங்கள், அத்துடன்

(ஆ) ஏதாவதொரு விவகாரத்தின் அசைவற்ற மற்றும் அசைவுள்ள ஆதனங்கள் தொடர்பிலான தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாட்டு நிதியை அந்த ஒவ்வொரு விவகாரத்தினதும் வருமானத்திலிருந்தும் குறைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

4. இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விவகாரம் தொடர்பிலும் 2017 ஆம் நிதியாண்டிற்குள் சப்பிரகமுவ மாகாண சபையினால் செய்யப்படும் செலவினங்கள், அந்த நிதியாண்டிற்குள் அத்தகைய விவகாரங்கள் மூலம் சப்பிரகமுவ மாகாண சபை பெறும் பெறுகைகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறாயினும் அத்தகைய செலவினங்கள் அந்த அட்டவணையின் V ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

5. இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விவகாரம் தொடர்பில் 2017 ஆம் நிதியாண்டின் இறுதியில் நிலுவையாக உள்ள பற்று மீதி, அந்த அட்டவணையின் VII ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்துடன் அந்த நிதியாண்டின் இறுதியில் அந்த விவகாரத்தின் மொத்த பொறுப்புக்கள் அந்த அட்வணையின் VIII ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

2017 ஆம் நிதி யாண்டிற்குள் 3ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்கள் தொடர்பிலான செலவினங்களுக் காக சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது சப்பிர கமுவ மாகாண சபையினால் தகுந்ததொன்று செய்யப்படக்கூடிய ஏனையவொரு நிதியத்திலிருந்து அல்லது பணத் தொகைகளிலிருந்து முற்பணங்களாகச் செலுத்துதல்.

6. 2017 ஆம் நிதியாண்டிற்குள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு விவகாரத்தின் மூலம் சப்பிரகமுவ மாகாண சபையினால் செய்யப்பட்டுள்ள செலவினங்களை நிவர்த்தி செய்வதற்குப் போதாமையாக இருப்பின் அச்செலவினங்களை நிவர்த்தி செய்வதற்காகவென அமைச்சர் கருதும் பணத்தொகைகளை சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது சப்பிரகமுவ மாகாண சபையினால் தகுந்ததென்று செய்யப்படக்கூடிய ஏனையவொரு நிதியத்திலிருந்து அல்லது முற்பணங்களாகச் செலுத்தப்பட வேண்டுமென அவரால் காலத்துக்குக்காலம் கட்டளை மூலம் பணிப்பிடலாம். ஆயினும் அவ்வாறு கொடுக்கப்படும் முற்பணங்களின் கூட்டுமொத்தத் தொகையானது அந்த அட்டவணையின் V ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய செலவின எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்தகைய விவகாரத்தின் பேரில் முற்பணங்களாக கொடுக்கப்பட்ட பணத்தொகைகள் எதுவும் அமைச்சரால் கட்டளை மூலம் பணிப்பிடப்படும் வகையில் சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்கு மீளச் செலுத்தப்படல் வேண்டும்.

இந்நிகழ்ச்சித் திட்டம் மீண்டு வரும் செலவினங் களுக்காக ஒதுக்கப் பட்டிருந்த போதி லும் செலவிடப் படாத பணத் தொகைகள் அந்நிகழ்சசித் திட் டத்திலேயே ஏனையவொரு ஒதுக்கத்திற்கு அல் லது அந்த செலவுத் தலைப்பின் கீழான ஏனையவொரு நிகழ்ச்சித் திட்டத் திற்கு மாற்றம் செய்யும் அதிகாரம்.

7. (1) இந்நியதிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தலைப்பின்கீழ் காட்டப்படும் ஏதாவதொரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டுவரும் செலவினங்களுக்கு அந்த அட்டவணையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒதுக்கப்பட்டுள்ளதும், ஆனால் செலவு செய்யப்படாததுமான அல்லது எதிர்காலத்திலும் செலவாகாதென எதிர்பார்க்கக்கூடியதுமான ஏதாவதொரு பணத்தொகை அந்நிகழ்ச்சித் திட்டத்திலேயான மூலதனச் செலவினங்களாக அல்லது ஏனைய நிகழ்ச்சித் திட்டத்தின் மீண்டுவரும் அல்லது மூலதனச் செலவினங்களாக ஒதுக்குவதற்குப் பிரதான செயலாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு உத்தியோகத்தரின் கட்டளைப்படி மாற்றப்படலாம்.

(2) இந்நியதிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தலைப்பின்கீழ் காட்டப்படும் மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை அந்த தலைப்பின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அல்லது கருத்திட்டத்திற்கு வெளியே மாற்றம் செய்தலை பிரதான செயலாளருக்கு மாத்திரம் செய்யப்படலாம்.

8. (1) அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களை மேற்கொள்வதற்காக வரிகளிலிருந்தும் ஏனைய மூலகங்களிலிருந்தும் பெறப்படும் வரவுகள், எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளை விடக் குறைவடையலாம் என்பதற்கு அல்லது,

(2) ஏதாவதொரு விவகாரத்திற்காக அல்லது விவகாரங்களுக்கான முதலில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்பட மாட்டாது என அமைச்சர் திருப்தியடையும் சந்தர்ப்பமொன்றில் சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது சப்பிரகமுவ மாகாண சபையினால் தகுந்ததொன்று செய்யப்படக்கூடிய ஏனையவொரு நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து, தன்னால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரமொன்றின்கீழ் செலவிடுவதற்காக விடுவிக்கப்பட்ட பணத்தொகைகள் முழுமையாக அமைச்சரால் சப்பிரகமுவ மாகாண சபையின் அனுமதியுடன் நீக்கிக்கொள்ளப்படலாம்.

*இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய மற்றும் ஆகக் குறைந்த எல்லைகளை மாற்றுவதற்கு அமைச்சர்களுக்குள்ள அதிகாரம்.*

9. அமைச்சரால் சப்பிரகமுவ மாகாண சபையின் அனுமதியுடன்–

(அ) இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் V ஆம் VII மற்றும் VIII ஆம் நிரல்களில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும்,

(ஆ) இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் VI ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளையும் கட்டளைகள் மூலம் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் வேறுபடுத்தப்படலாம் அல்லது மாற்றப்படலாம்.

இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளைகள் எதுவும் சப்பிரகமுவ மாகாண சபையின் தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டாலன்றி செல்லுபடியாகாதிருத்தல் வேண்டும்.

அத்தகைய கட்டளை எதுவும் எத்தினத்தில் இடம்பெறுகின்றதோ அத்தினத்திற்கு முன்னரானவொரு திகதியிலிருந்து அது செல்லுபடியாதல் வேண்டுமென அதில் குறித்துரைக்கப்பட்டிருந்தால் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட திகதி தொடக்கம் அது செயற்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

10. சப்பிரகமுவ மாகாண சபையினால் தீர்மானம் அங்கீகரிக்கப்படுதல் மூலம் இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் உகந்த நிரல்களுக்கு ஏதாவதொரு விவகாரத்தைச் சேர்ப்பதன் மூலமும் ;

(அ) அவ்விவகாரம் தொடர்பிலான எல்லா ஆகக்கூடிய எல்லைகள் அல்லது அவற்றின் எதனையும் ;

(ஆ) அவ்விவகாரம் தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையைச் சேர்ப்பதன் மூலமும் அந்த அட்டவணை திருத்தப்படலாம்.

## முதலாம் அட்டவணை

மாகாண சபையின் பொதுச் சேவைகளுக்கான செலுத்த வேண்டிய பணத்தொகைகள்

### தலைப்பு 800 தொடக்கம் 861 வரை

| | | | |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினங்கள் | - | ரூபா | 23,24,250,000 |
| மூலதனச் செலவினங்கள் | - | ரூபா | 2,463,950,000 |
| மொத்தம் | - | ரூபா | 25,709,200,000 |

**முதலாம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தலைப்பு | தாபனம் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் | மீண்டுவரும் செலவினங்கள் | மூலதனச் செலவினங்கள் |
|---|---|---|---|
| 800 | கௌரவ ஆளுநர் காரியாலயம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிருவாகம் | 80,630,000 | 4,000,000 |
| 801 | மாகாணசபைச் செயலகம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிருவாகம் | 186,502,000 | 5,000,000 |
| 802 | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிருவாகம் | 14,535,250 | 1,000,000 |
| 803 | கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிருவாகம் | 8,914,000 | - |
| 804 | பிரதான செயலாளர் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிருவாகம் | 269,094,000 | 420,950,000 |
| 805 | பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிருவாகம் | 26,200,200 | - |
| 806 | பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமை) | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிருவாகம் | 36,770,000 | - |
| 807 | பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிருவாகம் | 42,688,200 | - |
| 808 | பிரதி பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 50 நிர்மாணிப்பு மற்றும் பெருந்தெருக்களைப் பராமரித்தல் | 223,324,000 | - |
| 809 | மாகாண வருமானத் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிருவாகம் | 56,625,000 | - |
| 810 | நீதி, மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார, உள்நாட்டு வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிருவாகம் | 164,659,500 | 5,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 47 போக்குவரத்து சேவைகள் | - | 25,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 49 மின்சக்தி மற்றும் வலு சக்தி சேவைகள் | | 15,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 53 கூட்டுறவு அபிவிருத்தி | | 7,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 60 சமூக அபிவிருத்தி | | 40,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 61 வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி | 1,922,500 | 15,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 63 தோட்ட அடிப்படை வசதிகள் மற்றும் தோட்ட வீடமைப்பு | - | 25,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 71 வைத்தியசாலை சேவைகள் | - | 418,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 72 பொது சுகாதார சேவைகள் | - | 182,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 73 உள்நாட்டு சுகாதார சேவைகள் | - | 40,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 93 சமய மற்றும் கலாசார அமைச்சு | - | 25,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 96 மகளிர் அபிவிருத்தி | - | 7,000,000 |
| 811 | சுகாதார திணைக்களம் | - | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 179,847,236 | - |
| | நிகழ்ச்சித்திட்டம் 71 வைத்தியசாலைச் சேவைகள் | 3,974,471,000 | - |
| | நிகழ்ச்சித்திட்டம் 72 பொது சுகாதார சேவைகள் | 969,623,000 | - |

**முதலாம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தலைப்பு | தாபனம் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் | மீண்டுவரும் செலவினங்கள் | மூலதனச் செலவினங்கள் |
|---|---|---|---|
| 812 | ஆயுர்வேத திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 73 உள்நாட்டு சுகாதாரச் சேவைகள் | 377,553,000 | - |
| 813 | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 53 கூட்டுறவு அபிவிருத்தி | 89,939,500 | - |
| 814 | உள்ளூராட்சித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 60 சமூக அபிவிருத்தி | 2,023,988,700 | - |
| 820 | மாகாண தெருக்கள் அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள், உல்லாசப் பிரயாணத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 61,881,500 | - |
| | நிகழ்ச்சித்திட்டம் 50 நிர்மாண மற்றும் தெருக்களைப் பராமரித்தல் | 275,000,000 | 240,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 52 பிரதேச அபிவிருத்தி | - | 30,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 90 உல்லாச விவகாரங்கள் விளையாட்டுத்துறை | - | 77,000,000 |
| 821 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 90 உல்லாச விவகாரங்கள், விளையாட்டுத்துறை | 27,296,000 | - |
| 830 | சமூக நலன்புரி நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 49,386,000 | - |
| | நிகழ்ச்சித்திட்டம் 51 கைத்தொழில் அபிவிருத்தி | | 27,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 60 சமூக அபிவிருத்தி | 28,457,500 | 66,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 95 சமூகப் பாதுகாப்பு | - | 47,000,000 |
| 831 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 51 கைத்தொழில் அபிவிருத்தி | 124,595,500 | - |
| 832 | நன்னடத்தைகள் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 95 சமூகப் பாதுகாப்பு | 282,668,500 | - |
| 840 | கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 85,370,000 | - |
| | நிகழ்ச்சித்திட்டம் 80 ஆரம்பக் கல்வி | - | 220,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 81 இரண்டாந்தரக் கல்வி | - | 325,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 93 சமய மற்றும் கலாசார விவகாரங்கள் | 11,700,000 | 17,000,000 |
| 841 | கல்வித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 489,224,458 | - |
| | நிகழ்ச்சித்திட்டம் 80 ஆரம்பக் கல்வி | 4,336,181,148 | - |
| | நிகழ்ச்சித்திட்டம் 81 இரண்டாந்தரக் கல்வி | 8,138,139,993 | - |
| | நிகழ்ச்சித்திட்டம் 87 கல்வி கற்றலை மேம்படுத்தல் | 33,810,464 | - |
| | நிகழ்ச்சித்திட்டம் 88 கல்வி, திட்டமிடல், நிர்வாகம் மற்றும் சேவைகள் வழங்கல் | 4,962,000 | - |
| 850 | காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாய விலங்குற்பத்தி மற்றும் | | |
| | விலங்கு சுகாதார மற்றும் மீன்பிடித்துறை அமைச்சு | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 54,348,500 | 25,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 40 காணி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி | - | 3,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 43 நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமை | - | 30,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 44 விவசாய அபிவிருத்தி | - | 60,000,000 |
| | நிகழ்ச்சித்திட்டம் 45 கால்நடை வள அபிவிருத்தி | - | 50,000,000 |

**முதலாம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தலைப்பு* | *தாபனம் மற்றும் நிகழ்ச்சித் திட்டம்* | *மீண்டுவரும் செலவினங்கள்* | *மூலதனச் செலவினங்கள்* |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டம் 55 உணவுப் பாதுகாப்பினைப் பேணுதல் | | 12,000,000 |
| 851 | காணி ஆணையாளர் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 40 காணி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி | 55,009,000 | - |
| 852 | விவசாய திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 44 விவசாய அபிவிருத்தி | 201,421,000 | - |
| 853 | விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதாரத் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 45 கால்நடை வள அபிவிருத்தி | 240,107,288 | - |
| 861 | மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் | 18,404,063 | - |
| | நிகழ்ச்சித்திட்டம் 3 மாகாண நிர்வாகம் | | |
| | மொத்தம் | 23,245,250,000 | 2,463,950,000 |

**வரவு செலவு மதிப்பீடு - 2017**

*முற்பணக் கணக்கு விவகாரங்கள்*

| *i* | *ii* | *iii* | *iv* | *v* | *vi* | *vii* | *vii* |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | குறியீட்டு இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | பற்று நிலுவைகளின் உச்ச எல்லை | பொறுப்புக் களின் உச்ச எல்லை |
| | **கூட்டு மொத்தம்** | | | **1,444,370,000** | **604,945,000** | **2,985,321,100** | **3,300,000** |
| | **மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின உப மொத்தம்** | | | **1,346,170,000** | **554,145,000** | **2,950,351,100** | - |
| 1 | கௌரவ ஆளுநர் அவர்கள் | 80001 | மா. அ. உ. முற்பணம் | 2,000,000 | 600,000 | 5,600,000 | |
| 2 | மாகாண சபைச் செயலகம் | 80101 | மா. அ. உ. முற்பணம் | 2,500,000 | 1,000,000 | 5,130,700 | |
| 3 | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 80201 | மா. அ. உ. முற்பணம் | 1,000,000 | 500,000 | 3,598,100 | |
| 4 | கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு | 80301 | மா. அ. உ. முற்பணம் | 1,200,000 | 350,000 | 3,160,000 | |
| 5 | பிரதான செயலாளர் | 80401 | மா. அ. உ. முற்பணம் | 16,500,000 | 9,500,000 | 60,000,000 | |
| 6 | பிரதி பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | 80801 | மா. அ. உ. முற்பணம் | 19,000,000 | 6,500,000 | 53,000,000 | |
| 7 | மாகாண வருமானத் திணைக்களம் | 80901 | மா. அ. உ. முற்பணம் | 4,000,000 | 2,000,000 | 11,900,000 | |
| 8 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார, சுதேச வைத்திய, மகளிர் விவகாரம், கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81001 | மா. அ. உ. முற்பணம் | 6,000,000 | 2,500,000 | 22,700,000 | |
| 9 | சுகாதாரத் திணைக்களம் | 81101 | மா. அ. உ. முற்பணம் | 246,000,000 | 96,000,000 | 696,866,000 | |
| 10 | ஆயுர்வேதத் திணைக்களம் | 81201 | மா. அ. உ. முற்பணம் | 17,000,000 | 9,000,000 | 44,000,000 | |
| 11 | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | 81301 | மா. அ. உ. முற்பணம் | 6,870,000 | 5,000,000 | 16,770,000 | |
| 12 | உள்ளூராட்சித் திணைக்களம் | 81401 | மா. அ. உ. முற்பணம் | 4,000,000 | 1,800,000 | 14,100,000 | |
| 13 | மாகாண, வீதி அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள், சுற்றுலாத்துறை, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | 82001 | மா. அ. உ. முற்பணம் | 2,500,000 | 1,2,00,000 | 8,600,000 | |
| 14 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | 82101 | மா. அ. உ. முற்பணம் | 1,500,000 | 500,000 | 5,300,000 | |

**வரவு செலவு மதிப்பீடு - 2017** *(தொடர்ச்சி)*

*முற்பணக் கணக்கு விவகாரங்கள்*

| i | ii | iii | iv | v | vi | vii | vii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | பற்று நிலுவைகளின் உச்ச எல்லை | பொறுப்புக் களின் உச்ச எல்லை |
| 15 | சமூக நலன்புரி, நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு | 83001 | மா. அ. உ. முற்பணம் | 8,000,000 | 2,245,000 | 21,155,000 | |
| 16 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 83101 | மா. அ. உ. முற்பணம் | 11,600,000 | 8,500,000 | 23,027,000 | |
| 17 | நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | 83201 | மா. அ. உ. முற்பணம் | 8,000,000 | 2,500,000 | 23,250,000 | |
| 18 | கல்வி, தகவல் தொழில் நுட்பம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 84001 | மா. அ. உ. முற்பணம் | 5,000,000 | 2,000,000 | 14,000,000 | |
| 19 | கல்வித் திணைக்களம் | 84101 | மா. அ. உ. முற்பணம் | 945,000,000 | 387,000,000 | 1,828,000,000 | |
| 20 | காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதார, மீன் பிடித் தொழில் அமைச்சு | 85001 | மா. அ. உ. முற்பணம் | 2,500,000 | 1,100,000 | 13,180,000 | |
| 21 | காணி ஆணையாளர் திணைக்களம் | 85101 | மா. அ. உ. முற்பணம் | 5,000,000 | 2,500,000 | 10,805,000 | |
| 22 | விவசாயத் திணைக்களம் | 85201 | மா. அ. உ. முற்பணம் | 18,500,000 | 3,800,000 | 42,285,000 | |
| 23 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 85301 | மா. அ. உ. முற்பணம் | 1,000,000 | 7,500,000 | 19,500,000 | |
| 24 | மாகாண உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் | 86101 | மா. அ. உ. முற்பணம் | 1,500,000 | 550,000 | 4,424,300 | |
| 25 | மாகாண சபைச் செயலகம் | 80102 | மாகாண சபை உறுப்பினர்களுக் கான பலவின முற்பணங்கள் | 18,000,000 | 1,000,000 | 24,430,000 | - |
| 26 | முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி மத்திய நிலையம் புஸ்ஸெல்ல | 80102 | பயிற்சி நிலைய முற்பணக் கணக்குகள் | 9,000,000 | 3,000,000 | 500,000 | 50,000 |
| 27 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார, சுதேச வைத்தியம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81002 | கணனிக் கருத்திட்டம் | 600,000 | 250,000 | 400,000 | 150,000 |

**வரவு செலவு மதிப்பீடு - 2017** *(தொடர்ச்சி)*

*முற்பணக் கணக்கு விவகாரங்கள்*

| i | ii | iii | iv | v | vi | vii | vii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | குறியீட்டு இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | பற்று நிலுவைகளின் உச்ச எல்லை | பொறுப்புக் களின் உச்ச எல்லை |
| 28 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார, சுதேச வைத்தியம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81003 | பின்னவெல இப்பெரணிகம தொணிப்பொருள் பூங்கா முற்பணக் கணக்கு | 7,500,000 | 2,000,000 | 300,000 | 800,000 |
| 29 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார, சுதேச வைத்தியம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81004 | சப்பிரகமுவ மாகாண அரங்க மண்டப முற்பணக் கணக்கு | 3,800,000 | 1,200,000 | 200,000 | 200,000 |
| 30 | ஆயுர்வேத திணைக்களம் | 81202 | பின்னவல பஞ்சகர்ம வைத்திய நிலையத்தை ஸ்தாபித்தல் | 2,800,000 | 800,000 | 940,000 | 400,000 |
| 31 | உள்ளூராட்சி திணைக்களம் | 81402 | உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கான பலவின முற்பணங்கள் | - | 50,000 | - | - |
| 32 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 83102 | புடவைத் தொழில் நிலையங்களை ஸ்தாபித்தல் மற்றும் நிருவகித்தல் | 30,000,000 | 20,000,000 | 2,500,000 | 500,000 |
| 33 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 83103 | சிறுகைத்தொழில் நிலையங்களை ஸ்தாபித்தல் மற்றும் நிருவகித்தல் | 7,500,000 | 3,500,000 | 3,500,000 | 500,000 |
| 34 | கல்வி, தகவல் தொழில் நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு | 84002 | மெனேரிபிட்டிய - அட்டுலுகம கல்வி அபிவிருத்தி நிலைய முற்பணக் கணக்கு | 9,000,000 | 8,000,000 | 2,000,000 | 500,000 |
| 35 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 85302 | உந்துகொட கால்நடை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலைய முற்பணக் கணக்கு | 10,000,000 | 11,000,000 | 200,000 | 200,000 |

02-301

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.